# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-1** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : சஷ்மிதா | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் தற்போது சின்னாண்டாங்கோவில், நாடார் தெருவில் உள்ள என் அம்மா வீட்டில் வசித்து வந்து, வீட்டில் இருந்து வருகிறேன். நான் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என் கணவர் கிருஷ்ணமூர்த்தி என்பவரை காதலித்து திருமண்ம செய்தேன். என் திருமணத்திற்கு பிறகு நான் சின்னாண்டாங்கோவில், மேட்டுத்தெருவில் உள்ள என் அத்தை வீட்டில் வசித்து வந்தேன். 2020 ம் வருடம் பொங்கல் திருவிழாவின்போது, என் கணவருக்கும், கோகுல்கிருஷ்ணன் என்பவருக்கும் சண்டை வந்தது. அந்த சண்டையை

வைத்து 17.09.2020 அன்று இரவு சுமார் 8.00 மணிக்கு மேல் டீச்சர்ஸ் காலனியில் என் கணவர் வந்துக்கொண்டிருந்தபோது, கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி, பிரேம், மணிகண்டன் ஆகிய நால்வரும் என் கணவரை வழிமறித்து பிரச்சினை செய்தனர். அப்போது பிரேம் என் கணவரை அடித்துவிட்டார். அதனால் என் கணவர் பிரேமை தள்ளிவிட்டதில் அவருக்கு தலையில் அடிப்பட்டது. அந்த பிரச்சினைக்கு பிறகு என் கணவர் என் வீட்டிற்கு வந்துவிட்டார். மறுநாள் 18.09.2020 அன்று காலை சுமார் 9.00 மணியளவில் என் அத்தையும், மாமாவும் வீட்டில் இருந்தனர். நான், என் கணவர், என் மச்சாண்டார் பெரியசாமி, என் கொழுந்தனார் பிரவீன் ஆகியோர் கரூர் - கோவை சாலையில் டேன்சி அருகில் உள்ள இளநீர் கடையில் உட்கார்ந்திருந்தோம். அப்போது இளநீர்கடைக்கு மேற்கிலிருந்து துரைப்பாண்டி, கோகுலகிருஷ்ணனும் வேகமாக வந்தனர். அவர்கள் எங்க ஏரியாவிலேயே வந்து, எங்ககிட்டேயே பிரச்சினை செய்வியா என்று இத்தோடு செத்துபோடா என்று சொல்லி மாறி மாறி அவர்கள் கொண்டு வந்த அருவாளால் என் கணவரை வெட்டினார்கள். பின்னர் மணிகண்டன் என்பவர் வந்த Duke இருசக்கர வாகனத்தில் கோகுலகிருஷ்ணனும், துரைப்பாண்டியும் ஏறிச்சென்றனர். அவர்கள் பின்னாடியே பிரேம்குமார் என்பவரும் வண்டியில் சென்றார். என் மச்சாண்டாரும், கொழுந்தனாரும் கிட்டே போனதற்கு, கிட்டே வந்தால் உங்களையும் வெட்டி விடுவோம் என கோகுலும், துரைப்பாண்டியும் மிரட்டினார்கள். பின்னர் அவர்கள் வண்டியில் சென்றுவிட்டார்கள். நாங்கள் திலகா ஆம்புலன்சிற்கு போன் செய்து, ஆம்புலன்ஸ் வந்ததும், அப்பல்லோ மருத்துவமனைக்கு என் கணவரை கொண்டு சென்றோம். அப்பல்லோ மருத்துவமனையில் இருந்தபோது, என்னிடம் புகார் வாங்கி சென்றனர். அப்போது 10.00 மணி இருக்கும். அதன்பிறகு மருத்துவமனையிலிருந்து என் கணவர் இறந்துவிட்டார் என சொன்னார்கள். பின்னர் அங்கிருந்து அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுமாறு அப்பல்லோ மருத்துவமனையில் கூறினார்கள். அப்பல்லோ மருத்துவமனையிலிருந்து அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு என் கணவரை கொண்டு சென்றோம். அரசு மருத்துவமனையில் வந்து ஆய்வாளர் என்னை விசாரித்தார். அதன் பிறகு சுமார் இரண்டு வாரங்கள் கழித்து DSP என்னை விசாரித்தார். DSP என்னை விசாரித்தபோது, என் கணவரை கொலை செய்தவர்களுக்கு தண்டனை வாங்கி தரவேண்டும் என்று சொன்னேன். அதற்கு அவர் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று சொன்னார். நான் சரி என்று சொன்னேன். அதன்பிறகு ஒன்றரை மாதங்களுக்கு பிறகு ...

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்தது. என் கணவரை வெட்டிய கோகுல் மற்றும் துரைப்பாண்டியை எனக்கு தெரியும். கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன், பிரேம்குமார் ஆகியோர்களை நான் சிறையில் வைத்து நீதிபதி முன்பு அடையாளம் காட்டினேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்தேன். என் கணவரை கோகுல், துரைப்பாண்டி ஆகியோர் வெட்டிக்கொன்றுவிட்டார்கள் என்றும், அவர்களுக்கு தண்டனை வாங்கி கொடுக்க வேண்டும் என்று நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தேன். நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த வாக்குமூலம் அ.சா.ஆ.1. அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து போலீசாரிடம் நான் கொடுத்த புகார் வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதாகும். அது அ.சா.ஆ.2. அதில் உள்ள கையெழுத்து என்னுடையதாகும். அந்த புகாரை நான்தான் எழுதிக்கொடுத்தேன். எதிரிகள் கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி ஆகியோர் என் கணவரை வெட்ட பயன்படுத்திய அருவாள்கள் நீதிமன்றத்தில் உள்ளதாகும். எதிரி கோகுலகிருஷ்ணன் வைத்திருந்த அருவாள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.1. எதிரி துரைப்பாண்டி வைத்திருந்த அருவாள் நீதிமன்றத்தில் உள்ளது. அது சா.பொ.2. கோகுலகிருஷ்ணன் என் கணவரின் வலது கை, வலது கழுத்து கீழ், காதுக்கு கீழ், கைவிரல்கள் அனைத்திலும் வெட்டினார். துரைப்பாண்டி என் கணவரின் இடது முழங்கை, தலை ஆகியவற்றில் வெட்டினால். அதில் என் கணவரின் இடது மணிக்கட்டு தொங்கியது. நீதிமன்ற ஆஜரில் 1 வதாக உள்ளவர் கோகுலகிருஷ்ணன், 3 வதாக உள்ளவர் மணிகண்டன், 2 வதாக உள்ளவர் துரைப்பாண்டி, பிரேம்குமார் என்பவர் இன்று நீதிமன்ற ஆஜரில் இல்லை. பிரேம்குமாரையும் என்னால் அடையாளம் காட்ட முடியும்.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் பி.பி.ஏ., இரண்டாம் வருடம் வரை படித்துள்ளேன். எதிரி கோகுல் என்னுடைய காலேஜில் பிகாம்., படித்தார். அவரை நான் கல்லூரியில் படித்த இரண்டு வருடமும் தெரியும். மற்ற எதிரிகள் என் கணவரை வெட்ட வந்தபோதுதான் பார்த்தேன். பொங்கல் திருவிழாவை யார் ஏற்பாடு செய்து நடத்தினார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் அந்த சமயத்தில் எனக்கும், என் கணவருக்கும் திருமணம் ஆகவில்லை. அதன்பிறகுதான் எங்களுக்கு திருமணம் ஆனது. பொங்கல் திருவிழா எப்போது, எங்கு வைத்து, யார் நடத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. பொங்கல் கழித்து 10 நாட்களில் எனக்கும், என் கணவருக்கும் திருமணம் ஆனது. என் திருமணம் முடிந்த இரண்டு ...

மாதங்களில் கொரோனா தொற்று காரணமாக நாடு முழுவதும் முழு அடைப்பு நடந்தது. 2020 மார்ச் மாதம் முதல் 2021 பிப்ரவரி மாதம் வரை முழு அடைப்பு இருந்தது என்றால் இல்லை. 2020 ம் வருடம் மார்ச் மாதம் முதல் எவ்வளவு காலம் முழு அடைப்பு இருந்தது என்று எனக்கு தெரியாது. 17.09.2020 அன்று இரவு 1 முதல் 4 எதிரிகளுக்கும், என் கணவருக்கும் தகராறு நடந்ததை நான் நேரில் பார்க்கவில்லை. அன்று இரவு நடந்த சம்பவத்தை என் கணவர் என்னிடம் சொன்னார். பைசல் பேசி முடித்துவிட்டோம் என்றும் சொன்னார். அன்று இரவு நடந்த சண்டையை அஜீத்குமார் என்பவர் விலக்கி விட்டார் என்று என் கணவர் சொன்னார். யார், யார் சண்டை போட்டார்கள் என்று என் கணவர் என்னிடம் சொல்லவில்லை. இளநீர் கடை நெடுஞ்சாலையில் நடைபாதையில் உள்ள கடையாகும். கொரோனா காலத்தில் கடைகளை நடத்த போலீசார் அனுமதிக்கவில்லை என்றால் சம்பவத்தன்று அனைத்து கடைகளும் நடந்தது. வண்டிகளும் போய் வந்துக்கொண்டிருந்தது. திருமணத்திற்கு முன்பு என் கணவருடன் அந்த இளநீர்கடையிலிருந்து நான் வியாபாரத்தில் ஈடுபட்டதில்லை. என் திருமணம் நடந்து இரண்டு வாரத்தில் கொரோனா பொதுமுடக்கம் வந்தது. என் கணவரை வெட்டி விட்டு சென்றபிறகு, நான் என் கணவரை மடியில் வைத்து தூக்கி பார்த்தேன். 2, 3 நிமிடங்கள் என் கணவரை என் மடியில் வைத்து பார்த்தேன். என் உடைகளில் இரத்தக்கறை பட்டது. ஆம்புலன்சிற்கு நான் போன் செய்யவில்லை. கூட்டத்தில் இருந்தவர்கள் போன் செய்தனர். சம்பவம் நடக்கும்போது பெரியசாமி, பிரவீன் ஆகியோர் என்னுடன் இருந்தனர். பெரியசாமி, பிரவீன் ஆகியோருக்கும் 1 முதல் 4 எதிரிகளை தெரியும். பெரியசாமி, பிரவீன் ஆகியோர் எதிரிகளை பெயர் சொல்லி வெட்டாதீங்க என்று சொன்னார்களா என்றால் எதிரிகளின் பெயர்களை சொல்லவில்லை. வெட்டாதீங்க என்று சொல்லி கிட்டே சென்றார்கள். சம்பவம் நடக்கும்போது 1 முதல் 4 எதிரிகளை பெரியசாமி, பிரவீன் ஆகியோருக்கு நன்கு தெரியும். ஆம்புலன்சில் என் கணவரை என் மச்சாண்டார் பெரியசாமி ஏற்றினார். அப்படி ஏற்றும்போது பெரியசாமி உடைகளில் இரத்தக்கறை பட்டது என்றால் அதை நான் பார்க்கவில்லை. அப்பல்லோ மருத்துவமனை சம்பவ இடத்திலிருந்து அரை கி.மீ. தூரத்தில் உள்ளது என்றால் என் கடையிலிருந்து 2, 3 நிமிடத்தில் சென்று விடலாம். மருத்துவமனையில் ஆம்புலன்சிலிருந்து என் கணவரை மச்சாண்டார் பெரியசாமி, என் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளவர்களும் இறக்கினார்கள். மருத்துவமனைக்கு உள்ளே ஸ்ட்ரச்சரில் கொண்டு சென்றார்கள். என் வீட்டிற்கு அருகில் உள்ளவர்களுக்கு யார் தகவல் சொல்லி ...

மருத்துவமனைக்கு வந்தனர் என்றால் அது எனக்கு தெரியாது. ஆம்புலன்சில் என் கணவருடன் நானும் சென்றேன். ஆம்புலன்சில் எங்களுடன் என் மச்சாண்டார் பெரியசாமி வரவில்லை. அவர் எங்களுக்கு முன்பாகவே மருத்துவமனைக்கு சென்றுவிட்டார். என் கணவரை மருத்துவமனையில் சேர்த்தபோது, மருத்துவரை நான் பார்க்கவில்லை. என்னுடைய மச்சாண்டார் பெரியசாமி, என் கொழுந்தனார் பிரவீன் ஆகியோர் மருத்துவரை பார்த்தனர். மருத்துவமனையில் என் கணவரை சேர்த்தபிறகு, முக்கால் மணி நேரம் அப்பல்லோ மருத்துவமனையில் இருந்தோம். அப்பல்லோ மருத்துவமனைக்கு காவல்அதிகாரிகள் வரும்போது என்னுடன் என் மச்சாண்டார் பெரியசாமி, என் கொழுந்தனார் பிரவீன் ஆகியோர் என்னுடன் இருந்தனர் என்றால் என்னுடன் அவர்கள் இல்லை. என்னுடன் என் தங்கை இருந்தார். என் கணவருக்கு மருத்துவர் சிகிச்சையளிக்கும்போது நான் உடன் இருந்தேனா என்றால் என்னை உள்ளே விடவில்லை. என் கணவர் சீரியஷாக இருக்கிறார் என்று யாரையும் உள்ளே விடவில்லை. என் கணவரை சிகிச்சைக்கு சேர்த்த விவரத்தை பதிவு செய்தபோது நான் அருகில் இருந்தேனா என்றால் இல்லை. பெரியசாமி, பிரவீன் ஆகியோர் இருந்தனர். போலீசாரிடம் நான் புகார் கொடுத்தபோது, என் இரத்தம்படிந்த உடைகளை போலீசார் பெற்றுக்கொண்டார்களா என்றால் என் கணவரை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு சென்றபிறகு, அங்கு வைத்து போலீசார் என் உடைகளை பெற்றனர். நான் சொன்னபடி, சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நேரில் பார்த்தேன் என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பொதுமுடக்கம் அமுலில் இருந்த சமயத்தில் அங்கு கூட்டம் எதுவும் கூடவில்லை என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் பொதுமுடக்கம் அமுலில் இல்லை. நான் போன் மூலமாக சம்பவம் பற்றி கேள்விப்பட்டு, அரசு மருத்துவமனையில் உள்ள பிணவறைக்கு சென்றேன் என்று சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கு எதிராக இவ்வழக்கு பொய்யாக புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவரை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது, இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் தாக்கினார்கள் என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், சம்பவத்தை நேரில் பார்க்காத என்னை வைத்து படிப்படியாக இவ்வழக்கில் எதிரிகள் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நடந்து செல்வதற்கும், இருசக்கர வாகனத்தில் செல்வதற்கும் எனக்கு வித்தியாசம் தெரியும். புகாரில் இரண்டு சக்கர வாகனம் உபயோகப்படுத்தப்பட்டது பற்றி நான் சொல்லவில்லை என்றால் பதட்டத்தில் நான் சொல்லாமல் விட்டுவிட்டேன்.

புகாரில் எதிரிகள் ஓடிவிட்டார்கள் என பதட்டத்தில் சொல்லியுள்ளேன். புகாரில் அஜீத்குமாரும், கோகுல்ராஜும் வந்தனர் என்றும், உடன் வந்த இருவர் யாரென்று தெரியாது என்றும் சொல்லியுள்ளேன் என்றால் அந்த நேரத்தில் பதட்டத்தில் அவ்வாறு சொன்னேன். பின்னர் அஜீத்குமார் சம்பவத்தின்போது வரவில்லை என வாக்குமூலம் அளித்துள்ளேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், சம்பவத்தில் யார் ஈடுபட்டனர் என்று எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி பொங்கல் சமயத்தில் எந்த பிரச்சினையும் ஏற்படவில்லை என்றும், வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஒரு யுக்தி என்றால் சரியல்ல. 17.09.2020 அன்று இரவு நடந்த சம்பவமும் இவ்வழக்கிற்காக பின்யோசனையுடன் தயார் செய்யப்பட்ட ஒரு யுக்தி என்றால் சரியல்ல. இவ்வழக்கில் பிரேத விசாரணை நடக்கும்வரை யார் சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என தெரியாது என்றும், பிரேத விசாரணையின்போது உண்மைக்கு புறம்பாக எதிரிகளின் பெயர் சேர்க்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. சம்பவ சமயத்தில் பொதுமுடக்கம் அமுலில் இல்லை என வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகளுக்கும், இவ்வழக்கு குற்ற சம்பவத்திற்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. சா.பொ.1, 2 சான்று பொருட்கள் புதிதாக கடையில் வாங்கப்பட்டு, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்து ஒருமாதம் கழித்து அழைப்பாணையின்பேரில் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அழைத்துச்சென்றனர். அதற்கு முன்பு போலீசார் என்னை எத்தனை முறை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர் என்றால் இருமுறை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். போலீசார் 18.09.2020 அன்றே போலீசார் என்னை இருமுறை விசாரித்தனர். பிரேத விசாரணைக்கு பிறகு என்னை விசாரித்தபோது, "கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் மற்றும் ஏற்கனவே தெரிந்த கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் நண்பர்களான பிரேம்குமார், பாண்டி (எ) துரைப்பாண்டி, R.S.மணி (எ) மணிகண்டன் ஆகியோர் கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் வீட்டின் அருகில் என் கணவர் கிருஷ்ணமூர்த்தி நடந்து சென்றபோது தகராறு செய்துள்ளார்கள்" என சொன்னேன். நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் எனக்கு சொல்லிக்கொடுத்து, படிப்படியாக வழக்கை முன்னேற்றம் செய்து சொன்னேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே தெரிந்த எதிரிகளை அடையாள அணிவகுப்பு காட்ட வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் சம்பவத்தில் ஈடுபடவில்லை என்பதால்தான் புகாரில் நான் எதிரிகளின் பெயரை கூறவில்லை என்றால் சரியல்ல.

1, 2 எதிரிகள் இவ்வழக்கில் சம்மந்தப்படவில்லை என்பதால்தான் விபத்து பதிவேட்டில் அடையாளம் தெரியாத நபர்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ சமயத்தில் சின்னாண்டாங்கோவில், மேட்டுத்தெருவில் நான் வசித்து வந்தேன். எனது வீட்டிலிருந்து இளநீர் கடைக்கு இரண்டு வழிகளில் வரமுடியும். LGP நகர் வழியாகவும், மதுரை பைபாஸ் ரோடு வழியாகவும் வர முடியும். இளநீர் கடையிலிருந்து மதுரை பைபாஸ் ரோடு வழியாக என் வீட்டிற்கு செல்வதற்கு 4 கி.மீ. தொலைவு இருக்கும். இளநீர் கடையிலிருந்து LGP ரோடு வழியாக என் வீட்டிற்கு செல்வதற்கு 2 கி.மீ. தொலைவு இருக்கும். என் கணவரின் அண்ணன் பெரியசாமி மதுரை பைபாஸ் ரோட்டில் கரும்பு ஜீஸ் கடை வைத்திருந்தார். பாரதி ஒயின்ஷாப் அருகிலும் கரும்பு ஜீஸ் கடை வைத்திருந்தார். என் கணவரின் தம்பி பிரவீன் சம்பவ சமயத்தில் தொழில்நுட்ப கல்லூரியில் படித்து வந்தார் என்றால் இல்லை. அப்பல்லோ மருத்துவமனைக்கு ஆய்வாளர் வந்தார். அப்பல்லோ மருத்துவமனையில் வைத்து ஆய்வாளர் என்னிடமும், என் கணவரின் அண்ணன் பெரியசாமி, என் கணவரின் தம்பி பிரவீன் ஆகியோரிடம் விசாரித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் தனியாக இருந்தேன். புகார் மற்றும் போலீசார் விசாரணையில், சம்பவத்தின்போது சம்பவ இடத்தில் பிரவீன் இருந்தார் என்று கூறவில்லை என்றால் சரியல்ல. கூறியுள்ளேன். புகார் மற்றும் போலீசார் விசாரணையில், சம்பவத்திற்கு முதல்நாள் என் கணவர் தள்ளிவிட்டு, பிரேம்குமாருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என நான் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் அடையாளம் தெரியாத நபர்களின் அங்க அடையாளம், வயது, உயரம், நிறம் குறிப்பிடவில்லை என்றால் பதட்டத்தில் சொல்லவில்லை. அரசு மருத்துவமனையில் போலீசார் விசாரித்தபோது அந்த விவரங்களை கூறினேன். 17.09.2020 அன்று இரவு 8.00 மணிக்கு என் கணவர் என்னிடம் கூறியதாக நான் கூறும் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என் கடைக்கு அருகில் கடை வைத்திருந்தவர்கள் பெயர், விவரத்தை ஆய்வாளர் விசாரித்தபோதும், DSP விசாரித்தபோதும் நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. பக்கத்து இளநீர் கடைக்கார அம்மா என்று சொல்லியுள்ளேன். அவர் பெயர் சொல்லவில்லை.

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை கூடுதலாக ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ சமயத்தில் நான், என் கணவர், என் கணவரின் அண்ணன் பெரியசாமி, என் கொழுந்தனார் பிரவீன் ஆகியோர் ஒரே வீட்டில் வசித்து வந்தோம். சம்பவத்திற்கு முதல்நாளும் நாங்கள் அனைவரும் வீட்டில் இருந்தோம். மறுநாள் காலையில் இளநீர் கடைக்கு நான் என் கணவருடன் சேர்ந்து சென்றேன். நாங்கள் சென்ற இரண்டு நிமிடத்தில் என் கணவரின் அண்ணன் பெரியசாமியும், பிரவீனும் இளநீர் கடைக்கு வந்தனர். அரசு மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரித்தபோது, என்னுடன் பெரியசாமியும், பிரவீனும் இருந்தனர் என்றால் அங்கும் நான் தனியாகத்தான் இருந்தேன்.

<u>**10** ம் எதிரி தரப்பில் கு**.**வி**.**</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**11** ம் எதிரி தரப்பில் கு**.**வி**.**</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-2** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பெரியசாமி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் சின்னாண்டாங்கோவிலில் குடியிருந்து, மதுரை பைபாஸ் ரோட்டில் கரும்பு ஜீஸ் கடை வைத்துள்ளேன். நான் இந்து, பள்ளர் சாதியை சேர்ந்தவன். இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் தம்பி. அ.சா.1 என் தம்பியின் மனைவி. 17.09.2020 அன்று இரவு எங்கள் ஊரில் வைத்து என் தம்பிக்கும், பிரேம்குமார் என்பவருக்கும் சண்டை ஆனது. அந்த பிரச்சினை காரணமாக, மறுநாள் 18.09.2020 அன்று காலையில் நானும், என் தம்பி கிருஷ்ணமூர்த்தி, என் தம்பியின் மனைவி அ.சா.1, என் மற்றொரு ...

தம்பி பிரவீன் குமார் ஆகியோர் இளநீர் கடையில் இருந்தோம். அப்போது காலை சுமார் 9.30 – 10.00 மணியளவில் மூன்று நபர்கள் பைக்கில் வந்தார்கள். இரண்டு பேர் இறங்கி வந்து, என் தம்பி கிருஷ்ணமூர்த்தியை வெட்டினார்கள். கோகுலகிருஷ்ணனும், துரைபாண்டியும் என் தம்பியை வெட்டினார்கள். அவர்கள் என் தம்பியை வெட்டியபோது தடுக்க முயற்சி செய்தோம். கிட்டே வந்தால் வெட்டிவிடுவோம் என மிரட்டினார்கள். நாங்கள் பயந்துபோய் கிட்டே செல்லவில்லை. என் தம்பியை அருவாளை வைத்து வெட்டினார்கள். அந்த அருவாள்கள் நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1, 2. நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.1 அருவாளை வைத்து எதிரி கோகுலகிருஷ்ணன் என் தம்பியை வெட்டினார். நீதிமன்றத்தில் உள்ள சா.பொ.2 அருவாளை வைத்து எதிரி துரைப்பாண்டி என் தம்பியை வெட்டினார். முதலில் கோகுல் என் தம்பியை இடது காதுக்கு பின்னால் தலையில் வெட்டினார். அதற்கடுத்து துரைப்பாண்டி என் தம்பியை தலையிலும், வலது பின்கழுத்திலும் வெட்டினார். அதன்பின்னர் என் தம்பியை இருவரும் மாறி மாறி வெட்டினார்கள். என் தம்பியின் இடது கை இரண்டு, மூன்று துண்டுகளானது. அதன்பிறகு இருவரும் மணிகண்டன் என்பவர் ஓட்டிய வண்டியில் ஏறி போய்விட்டனர். அந்த வண்டி வெள்ளை கலர் Duke வண்டி. அந்த வாகனத்தில் பதிவு எண் இல்லை. பிரேம் என்பவர் மற்றொரு வண்டியில் தனியாக வந்திருந்தார். அவர் உயிர் மிச்சம் இருந்தால் வெட்டிவிட்டு வாங்கடா என்று சத்தம்போட்டார். கெட்ட வார்த்தையாலும் பேசினார். அதன்பிறகு அவர்கள் அங்கிருந்து தப்பிச்சென்றனர். பிரேம் என்பவர் ஹீரோஹோண்டா சிடி டீலக்ஸ் என்ற பைக்கில் வந்தார். நாங்கள் அவர்கள் பின்னால் விரட்டினோம். அவர்களை பிடிக்க முடியவில்லை. பின்னர் கூட்டத்தில் இருந்தவர்கள் ஆம்புலன்சை வரவழைத்தனர். என் தம்பியை நான் ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு, நான் தகவல் தெரிவிப்பதற்காக எனது இருசக்கர வாகனத்தில் முன்னால் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றேன். அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்தோம். என் தம்பியை அவசர சிகிச்சைபிரிவில் கொண்டு சென்று சிகிச்சையளித்தனர். எதிரிகள் வந்த வாகனத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்ற வராண்டாவில் உள்ள வாகனத்தில் எதிரி பிரேம்குமார் வந்தார். அந்த வாகனம் சா.பொ.3. எதிரிகள் கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன், பிரேம்குமார் ஆகியோர்களை என்னால் அடையாளம் காட்டமுடியும். நீதிமன்ற ஆஜரில் உள்ள 1 ம் நபர் எதிரி கோகுல், 3 ம் நபர் R.S.மணி, ஆஜரில் 2 வதாக உள்ளவர் எதிரி துரைப்பாண்டி, மற்றொருவர் இன்று ...

நீதிமன்றத்தில் இல்லை. அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சையளித்தார்கள். சிறிதுநேரத்தில் என் தம்பி இறந்துவிட்டார் என 10.30 மணியளவில் தெரிவித்தனர். அதன்பிறகு கரூர் அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக என் தம்பியின் பிரேதத்தை கொண்டு சென்றனர். இது சம்மந்தமாக போலீசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். பின்னர் 10, 15 நாட்கள் கழித்து DSP என்னை விசாரித்தார். DSP யிடம் நடந்ததை சொன்னேன். பின்னர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திலும் வாக்குமூலம் கொடுத்தேன். நீதித்துறை நடுவரிடம் நான் கொடுத்த வாக்குமூலத்தில், என் தம்பியை கோகுலகிருஷ்ணனும், துரைபாண்டியும் வெட்டினார்கள் என்று சொன்னேன். மணிகண்டன், பிரேம்குமாரும் வண்டி ஓட்ட எதிரிகள் தப்பிச்சென்றனர் என்று வாக்குமூலம் அளித்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலம். அது அ.சா.ஆ.3.

**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் 12 ம் வகுப்புவரை படித்துள்ளேன். இளநீர்கடைக்கு எங்கிருந்து சரக்குகள் வாங்குவார்கள் என எனக்கு தெரியும். கரும்பு ஜீஸ் கடை சம்பவத்தின்போது நடக்கவில்லை. வழக்கமாக 12.00 மணிக்குமேல்தான் கரும்பு ஜீஸ் கடையை தொடங்குவேன். கொரோனா தொற்றுக்காலத்தில் பொதுமுடக்கம் இருக்கும்வரை நான் கடை நடத்தவில்லை. பொதுமுடக்கத்தில் இடையில் தளர்வு செய்தார்கள், அப்போது கடை நடத்தினேன். குறிப்பிட்ட நேரத்திற்கு கடை நடத்த அனுமதித்தார்கள். பொதுமுடக்க நேரத்தில் அத்தியாவசியப்பொருட்கள் விற்பனை செய்வதற்கு குறிப்பிட்ட நேரத்திற்கு விலக்களிக்கப்பட்டது. நான் நடத்தி வந்த கரும்பு ஜூஸ் கடை அத்தியாவசியப்பொருள் என்றும், அதற்கு விலக்கு கிடையாது என்றும் சொன்னால் சம்பவ சமயத்தில் பொதுமுடக்கம் இல்லை. இளநீர் கடையும் அத்தியாவசிய கடை இல்லை என்பதால் பொதுமுடக்கத்தில் விலக்கு அளிக்கப்படவில்லை என்றால் எல்லாக்கடையும் நடந்தது. இளநீர் கடை நடத்துவதற்கு மாநகராட்சியில் அனுமதி பெற்றுள்ளோம். அந்த அனுமதி என் அப்பா பெயரிலோ, அம்மா பெயரிலோ உள்ளது. இருவர் பெயரில் யார் பெயரில் உள்ளது என்று எனக்கு தெரியாது. இருவர் பெயரிலும் உரிமம் கிடையாது என்றும், அதனால்தான் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் லைசன்ஸ் வாங்கினார்கள். 17.09.2020 அன்று நடந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. கேள்விப்பட்டேன். 18.09.2020 அன்று நடந்த சம்பவம் எவ்வளவு நேரம்

நடந்தது என்றால் இரண்டு, மூன்று நிமிடங்கள் நடந்தது. நான், என் தம்பி இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி, மற்றொரு தம்பி பிரவீன் ஆகியோர் ஒன்றாகத்தான் அமர்ந்திருந்தோம் என்றால் அங்கிருந்த சிறிய இடத்தில் தள்ளி, தள்ளி அமர்ந்திருந்தோம். இளநீர் கடை 10 x 10 அடி அளவில் உள்ளது. குவித்து வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு பக்கத்தில் வரிசையாக அமர்ந்திருந்தோம். கோகுலகிருஷ்ணன், துரைப்பாண்டி, மணிகண்டன், பிரேம்குமார் ஆகியோரை எனக்கு முன்பே தெரியும். கோகுலகிருஷ்ணன் உள்ளூர் என்பதால் அவரை எனக்கு தெரியும். பழக்கம் கிடையாது. மற்றவர்களை எனக்கு 2, 3 வருடங்களாக தெரியும். பிரேம்குமார் எனக்கு பழக்கம் உள்ளவர். எதிரிகள் என் தம்பியை வெட்டும்போது, நான் தடுக்க முயற்சிசெய்யவில்லை என்றால் தடுக்க முயன்றபோது அருவாளை நீட்டிக்கொண்டு, பக்கத்தில் வந்தால் வெட்டுவோம் என்று கூறினார்கள். எதிரிகள் சென்றபிறகு நான் தொட்டு பார்த்தேனா என்றால் நான்தான் அவரை தூக்கி ஆம்புலன்சில் ஏற்றினேன். இளநீர் கடைக்கு எதிரே உள்ள டேன்சி நிறுவனம் அந்த சமயம் பூட்டியிருந்ததா என்றால் வெளியே கேட் எப்போதும் பூட்டிதான் இருக்கும். உள்ளே இயங்கிக்கொண்டிருந்ததா என்று எனக்கு தெரியாது. கொரோனா காலத்திற்கு முன்பு வெளியே பொருட்களை வைத்து வியாபாரம் செய்து வந்தனர். சம்பவத்தன்று பொதுமுடக்கம் இருந்தது என்றும், அதனால் டேன்சி நிறுவனம் இயங்கவில்லை என்றும் சொன்னால் அந்த நிறுவனம் இயங்கியதா என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்சிற்கு யார் போன் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. கூட்டம் நிறைய கூடிவிட்டது. கூட்டத்தில் இருந்தவர்கள் போன் செய்தார்கள். ஆம்புலன்சில் வரும்வரை நான் அங்கேயேதான் இருந்தேன். கூட்டமும் அங்கே இருந்தது. ஆம்புலன்சில் வந்தவர்கள் போன் செய்தவர் யாரென்று கூட்டத்தை பார்த்து விசாரிக்கவில்லை. ஆம்புலன்ஸ் ஓட்டி வந்தவர் யாரென்று எனக்கு தெரியாது. என் தம்பியை தூக்குவதற்கு எனக்கு உதவியாக என் மற்றொரு தம்பியும், ஆம்புலன்ஸ் ஓட்டுநரும் உதவினர். சம்பவம் நடந்து ஐந்து நிமிடத்திற்குள் ஆம்புலன்ஸ் வந்தது. அப்போது என் தம்பி உடலிலிருந்து இரத்தப்போக்கு நிறைய சென்றுக்கொண்டிருந்தது. என் தம்பியை நான் தூக்கும்போது என் சட்டையில் இரத்தக்கறை பட்டது. என் தம்பியை ஆம்புலன்சில் ஏற்றியவுடன் நான் முன்னால் செல்வதற்காக சென்றுவிட்டேன். அதனால் ஆம்புலன்சில் யார், யார் சென்றனர் என்று எனக்கு தெரியாது. ஆம்புலன்ஸ் வருவதற்கு முன்பே நான் மருத்துவமனைக்கு சென்றுவிட்டேன். காயம்பட்ட கிருஷ்ணமூர்த்தியை அப்பல்லோ மருத்துவமனையில் யார் இறக்கியது என்றால் மருத்துவமனை ஊழியர்கள்

இறக்கினார்கள். அப்போது நான் உடனிருந்தேன். அ.சா.1 சஷ்மிதா ஆம்புலன்சில் வந்தார். மருத்துவர் சம்பவம் எப்படி நடந்தது என்று விசாரித்தார். அப்போது நான் அங்கு இருந்தேன். அ.சா.1 ம் இருந்தார். மருத்துவர் கேட்டவுடன் நாங்கள் ஆள் ஆளுக்கு சொன்னோம். அ.சா.1 ம் என் தம்பி பிரவீனும் இருந்தோம். நாங்கள் மூன்று பேரும் ஆள், ஆளுக்கு சொல்ல ஆரம்பித்தோம். போலீசார் எவ்வளவு நேரத்தில் வந்தனர் என்றால் நான் மருத்துவமனையின் உள்ளே இருந்து வெளியே வந்தபோது போலீசார் இருந்தனர். நான் மருத்துவமனையின் உள்ளே கால்மணி நேரம் இருந்தேன். மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் யாரும் உள்ளே செல்லவேண்டாம் என்று சொன்னதால் நாங்கள் மூவரும் வெளியே வந்துவிட்டோம். போலீசார் வந்தவுடன் என்ன நடந்தது என்று விசாரித்தார். போலீசாருக்கு யார் தகவல் சொன்னார்கள் என்று நான் தெரிந்துக்கொள்ளவில்லை. நாங்கள் மூவரும் சொன்னதை போலீசார் எழுதிக்கொண்டார்கள். என் தம்பி மனைவிதான் முதலில் சொன்னார். அப்போது நான் உடனிருந்தேன். ஒரு பேனாவும், பேப்பரும் கொடுத்து என் தம்பி மனைவியிடம் கொடுத்து எழுதச்சொன்னார்கள். என் தம்பி மனைவி எழுதினார். என் தம்பி மனைவி எழுதும்போது நான் பக்கத்தில் இருந்தேன். அவர் என்ன எழுதினார் என்று எனக்கு தெரியும் என்றால் நான் அதை பார்க்கவில்லை. தள்ளி நின்றுக்கொண்டிருந்தேன். என் தம்பி மனைவி எழுதிக்கொடுத்தபிறகு, என்ன எழுதிக்கொடுத்தாய் என்று கேட்டேன். அவர் வெட்டிவிட்டார்கள் என்று எழுதிக்கொடுத்தேன் என்று சொன்னார். அவர் என்னிடம் சொன்னது சரியாக இருந்தது. இரத்தம்படிந்த என் உடையை போலீசார் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளவில்லை. என்னை போலீசார் அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். அதன்பிறகு 10, 15 நாட்கள் கழித்து என்னை விசாரித்தனர். போலீசார் சொல்லிக்கொடுத்து, என்னை சாட்சியாக சேர்த்துள்ளனர் என்றும், நான் சம்பவத்தை பார்க்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் சொன்னபடி, போலீசார் என்னிடம் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும், அவர்களாகவே வாக்குமூலம் தயாரித்தனர் என்றும் சொன்னால் சரியல்ல. சா.பொ.1, 2 அருவாள்கள் புதிதாக கடையிலிருந்து புதியதாக வாங்கப்பட்டு, அதை அடையாளம் காட்டி, சாட்சியம் அளிப்பதற்கு போலீசார் எனக்கு சொல்லிக்கொடுத்தனர் என்றால் சரியல்ல. நான், என் தம்பி கிருஷ்ணமூர்த்தி, என் தம்பி பிரவீன் ஆகியோர் பைக் ரேஸ்-ல் ஆர்வம் உடையவர்கள். நாங்கள் அதிக பைக் ரேஸ் செய்துள்ளோம். பைக் ரேஸ் நடத்துவது சட்டவிரோதம் என்றால் கட்சிக்காரர்கள் சட்டப்படி நடத்தினார்கள். எந்த ...

சட்டப்படி நடத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. பொதுவாக பைக்ரேஸ் நடத்தும்போது சண்டை நடப்பது வழக்கம் என்றால் நான் பைக்ரேஸ் செல்லும்போது சண்டை நடக்கவில்லை. சேவல் சண்டையிலும் ஆர்வமாக ஈடுபடுவோம். அதை தடை செய்வதற்கு முன்பாக ஈடுபட்டோம். பைக்ரேஸ், சேவல் சண்டை ஆகியவற்றில் இருந்த விரோதம் காரணமாக என் தம்பியை யாரோ கொலை செய்ததை, யார் கொலை செய்தனர் என்பதை போலீசார் கண்டுபிடிக்க முடியாமல் என்னை சாட்சியாக வைத்து இவ்வழக்கை ஜோடனை செய்துள்ளனர் என்றால் சரியல்ல. சம்பவ சமயத்தில், சம்பவ இடத்தில் நான் இல்லை என்றும், சம்பவ இடத்திற்கு 1 முதல் 4 எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. என் தம்பி மருத்துவமனையில் இருக்கிறார் என கேள்விப்பட்டு நான் மருத்துவமனைக்கு வந்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. 17.09.2020 அன்று எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும், காவல்துறையினர் ஜோடனை செய்து, அன்றைய தினம் சம்பவம் நடந்தது என சொல்லிக்கொடுத்து, சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. DSP என்னை விசாரித்தபிறகு, நீதித்துறை நடுவரிடம் வாக்குமூலம் அளித்தேன். நீதித்துறை நடுவரிடம் சொல்லிக்கொடுத்ததின் அடிப்படையில் நான் வாக்குமூலம் அளித்தேன் என்றால் சரியல்ல.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**<u>10 ம் எதிரி தரப்பில் கு.வி.</u>**

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

**<u>11 ம் எதிரி தரப்பில் கு.வி.</u>**

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-3** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரவீன் (எ) பன்னீர்செல்வம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் சின்னாண்டாங்கோவில், தண்ணீர் தொட்டிக்கு பின்பக்கம் குடியிருந்து வந்து, மணல்வண்டி ஓட்டி வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் அண்ணன். அ.சா.2 என் மூத்த அண்ணன். அ.சா.1 என் அண்ணி. இறந்துபோன என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியின் மனைவி. நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தோம். மூன்று பேர் என் அண்ணனை வெட்டினார்கள். அப்போது நான் இளநீர் கடையில் இருந்தேன். 18.09.2020 அன்று பிரேம்மஹால், ...

டேன்சிக்கு எதிரில் உள்ள இளநீர் கடையில் இருந்தோம். கோகுல், துரைப்பாண்டி, மணிகண்டன் ஆகிய மூவரும் ஒரு வண்டியில் வந்தனர். கோகுலும், துரைபாண்டியும் இறங்கி வந்து வெட்டினார்கள். நாங்கள் தடுக்க சென்றோம். அருவாளை ஓங்கி என்னை வெட்ட வந்தார்கள். அதனால் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. வெட்டியவுடன் என் அண்ணன் கீழே விழுந்து துடித்துக்கொண்டிருந்தார். மற்றொரு வண்டியில் பின்னால் ஒருவர் வந்தார். அவர் பெயர் சரியாக ஞாபகமில்லை. பொங்கல் விளையாட்டு சம்மந்தமாக என் அண்ணனுக்கும், பிரேம் என்பவருக்கும் பிரச்சினை இருந்தது. என் அண்ணனை வெட்டியபிறகு, ஆம்புலன்ஸ் வந்தது. ஆம்புலன்சில் அப்பல்லோ மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அப்பல்லோ மருத்துவமனையில் சிகிச்சையளித்தனர். சிறிதுநேரத்தில் என் அண்ணன் இறந்துவிட்டார் என தெரிவித்தனர். அதன்பிறகு அரசு மருத்துவமனை போகச்சொன்னார்கள். அரசு மருத்துவமனை சென்றபிறகு, ஆய்வாளர் வந்து என்னிடம் விசாரித்தார். சம்பவத்திற்கு முதல்நாள் இரவு நான் கரூருக்கு வந்துவிட்டு, இளநீர் கடைக்கு சென்று, இளநீர் கடையை பார்த்துவிட்டு வந்தேன். டீச்சர்ஸ் காலனியில் உள்ள கறிக்கடை சந்து வழியாக நானும், கார்த்திக் என்பவரும் வந்துக்கொண்டிருந்தோம். அப்போது கறிக்கடைக்கு எதிர்பக்கம் 7, 8 பேர் நின்று கும்பலாக பேசிக்கொண்டிருந்தார்கள். என்னை ஊருக்குள்ளே வந்து ஒருவன் அடித்துவிட்டான், அவனை வெட்டி கெலை செய்ய வேண்டும் என்று பேசிக்கொண்டார்கள். அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். அவர்கள் கோகுல், துரைப்பாண்டி, அரவிந்த், மணிகண்டன், பிரேம்குமார் இன்னும் நிறைய பேர் பேசிக்கொண்டிருந்தார்கள். பிரேம்குமார் என்னை ஒருத்தன் வந்து அடித்துவிட்டான், அவனை கொலை செய்தே ஆக வேண்டும் என்று சொன்னார். கோகுல் என்பவர் சொல் அத்தான் அவனை நாளைக்கே கொலை செய்து விடலாம் என்று சொன்னார். நான் அதை கேட்டுவிட்டு, வீட்டிற்கு வந்துவிட்டேன். என்ன பிரச்சினை என்று எனக்கு அப்போது தெரியாது. மறுநாள் என் அம்மா இளநீர் லோடு வாங்குவதற்காக சென்றுவிட்டார். என் அண்ணனும், அண்ணியும் கடையை பார்ப்பதற்கு சென்றனர். சிறிதுநேரத்தில் நானும், பெரிய அண்ணனும் இளநீர் லோடை இறக்கி வைப்பதற்காக சென்றோம். நாங்கள் அங்கு சென்றிருந்தபோது, இவ்வழக்கு சம்பவம் நடந்தது. நீதிமன்ற ஆஜரில் உள்ள 1 வது நபர் எதிரி கோகுல், 2 வது நபர் துரைப்பாண்டி, 3 வது நபர் மணிகண்டன், பிரேம்குமார் என்பவர் மற்றொரு வண்டியில் வந்தார். அவர் இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. சம்பவத்திற்கு முதல்நாள் இரவில் நீதிமன்றத்தில் சிவப்பு சட்டை ...

அணிந்துள்ள அரவிந்த என்பவரும், அவருக்கு இடதுபக்கம் அமர்ந்துள்ள தமிழ்செல்வன், அதற்கடுத்து இடதுபக்கம் அமர்ந்துள்ள கலைச்செல்வன், அதற்கடுத்து இடதுபக்கம் முகக்கண்ணாடி அணிந்திருப்பவரும் இருந்தார் அவர் பெயர் எனக்கு சரியாக ஞாபகமில்லை. அவர்களும் சம்பவத்திற்கு முந்தைய நாள் நின்று பேசிக்கொண்டிருந்தார்கள். இந்த விவரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேன். அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் விசாரித்தார்கள். அதன்பிறகு 10, 15 நாட்கள் கழித்து DSP என்னை விசாரித்தார். இது சம்மந்தமாக நீதித்துறை நடுவரிடமும் வாக்குமூலம் கொடுத்தேன். நீதித்துறை நடுவரிடம் கொடுத்த வாக்குமூலத்தில், முந்தைய நாள் இரவு பிரேம், மணிகண்டன், கோகுல், துரைப்பாண்டி, அரவிந்த், தமிழ்செல்வன், கலைச்செல்வன் ஆகிய அனைவரும் பேசிக்கொண்டிருந்ததையும், என்னை ஊருக்குள் வந்து ஒருவன் அடித்துவிட்டான், அவனை எப்படியாவது முடித்து தீர்த்துக்கட்டவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்ததையும், கோகுல் என்பவர் பிரேமிடம் நான் செய்றேன் அத்தான், நீ சொல்லு என்று சொன்னதையும், நான் அதை கேட்டுக்கொண்டே வண்டியில் சென்றதையும் நீதித்துறை நடுவரிட் வாக்குமூலம் அளித்தேன். இரவு 11.00 மணிக்கு வீட்டிற்கு சென்று படுத்துவிட்டேன் என்பதையும், மறுநாள் என் அம்மா இளநீர் லோடு வாங்க சென்றுவிட்டார் என்பதையும், என் அண்ணனும், அண்ணியும் இளநீர் கடைக்கு சென்றார்கள் என்பதையும், நானும், என் பெரிய அண்ணனும் லோடு இறக்க கடைக்கு சென்றோம் என்பதையும், மூன்று பேர் ஒரு வண்டியிலும், மற்றொருவர் மற்றொரு வண்டியிலும் வந்தார் என்பதையும், கோகுலும், துரைப்பாண்டியும் வண்டியிலிருந்து இறங்கினார்கள் என்றும், மணிகண்டன் வண்டியிலேயே இருந்தார் என்றும், வண்டியிலிருந்து இறங்கிய கோகுலும், துரைப்பாண்டியும் வெட்டினார்கள் என்றும், கோகுல் என் அண்ணனின் பின்கழுத்து, மணிக்கட்டு, கையில் வெட்டினார் என்றும், துரைப்பாண்டி என் அண்ணனின் முதுகிலும், தலையிலும், இடது கையிலும் வெட்டினார் என்றும் நீதித்துறை நடுவர் வாக்குமூலத்தில் சொன்னேன். நாங்கள் தடுக்க சென்றபோது கோகுலும், துரைப்பாண்டியும் அருவாளை ஓங்கி வந்தார் என்றும், பிரேம்குமார் மற்றொரு வண்டியில் இருந்தார் என்றும், அவர்கள் வெட்டியவுடன், இன்னும் சாகலடா நல்லா வெட்டுங்கடா என்று சொன்னபிறகு, கீழே இழுத்துப்போட்டு வெட்டினார்கள் என்றும், வெட்டிய பிறகு வண்டியை எடுத்துக்கொண்டு, வேகமாக சென்றுவிட்டார்கள் என்றும் சொன்னேன். நான் நீதித்துறை நடுவரிடம் அளித்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவதாகும். அதில் உள்ள எனது கையெழுத்து அ.சா.ஆ.4.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் வீட்டிலிருந்து இளநீர் கடை 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. அந்த பாதை LGB நகர் வழியாக உள்ளது. என் வீட்டிலிருந்து மதுரை பைபாஸ் ரோட்டின் வழியாகவும் இளநீர் கடைக்கு வரமுடியும். 17.09.2020 அன்று "கரூர்" சென்றேன் என்பதை இன்றுதான் முதன்முதலில் சொல்கிறேன். நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கொரோனா காலத்தில் எப்போது முழுஅடைப்பு இருந்தது என்றும், எந்தெந்த நாட்களில் விலக்களிக்கப்பட்டிருந்தது என்றும் எனக்கு தெரியாது. ஞாபகமில்லை. விலக்கு இருக்கும்போதும் இரவு 9.00 மணிக்குமேல் ஆட்கள் நடமாட்டம் வெளியே இருக்கக்கூடாது என தடை செய்யப்பட்டிருந்தது. பொதுமுடக்கத்தின்போது தடை செய்யப்பட்ட நேரத்தில் சட்டத்திற்கு உட்பட்டு நான் வெளியே செல்லவில்லை. என்னுடன் வந்த கார்த்திக் அண்ணன் எனக்கு பிறந்தநாள் முதல் பழக்கம். அவர் என் அண்ணன் முறை. பக்கத்து வீட்டைச் சேர்ந்தவர். நானும், கார்த்திக் அண்ணனும் 17ம் தேதி இரவு வண்டியில் சென்றோம் என்பதை தற்போதுதான் முதன்முதலில் கூறுகிறேன். கார்த்திக் வண்டியில் சென்றோம். இளநீர் கடையிலிருந்து என் வீட்டிற்கு இருசக்கர வாகனத்தில் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். என்னிடம் கைப்பேசி உள்ளது. அன்றைய தினமும் கைப்பேசி வைத்திருந்தேன். கூட்டமாக பேசிக்கொண்டிருந்தபோது இரவு 11.00 மணி இருக்கும். பொதுமுடக்கம் அமுலில் இருந்தபோது காவல்துறை ரோந்து அதிகளவில் இருந்தது. கொலை செய்யப்போவது பற்றி பேசியது சட்டப்படி குற்றம் என்பது எனக்கு தெரியும். மறுநாள் காலை கொலை செய்யப்போவது பற்றி பேசிக்கொண்டிருந்ததை நான் என்னிடமிருந்து கைப்பேசி மூலம் காவல்துறைக்கு தகவல் சொல்லவில்லை. எதிரிகள் கூட்டமாக பேசிக்கொண்டிருந்த இடத்திலிருந்து என் வீடு 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. நாங்கள் சீரான வேகத்தில் பிரேக் பிடிக்காமல் சென்றுக்கொண்டிருந்தோம். கறிக்கடை சந்து குழியும், குண்டுமாக இருந்ததால் மெதுவாக சென்றோம். அவர்கள் பேசியதை என்ன என்று கேட்பதற்காக வண்டியில் மெதுவாக சென்றோம். அவர்கள் நான்குபுறமும் பார்த்து நின்றார்களா என்றால் ஒரே இடத்தில் கும்பலாக எதிர் எதிரே நின்று பேசினார்கள். நாங்கள் சென்றதை பார்த்து எதிரிகள் பேச்சை நிறுத்தினார்களா என்றால் எதிரிகள் எங்களை கவனிக்கவில்லை. அவர்கள் எங்களை கவனிக்காத அளவிற்கு இருட்டில் சென்றோம் என்றால் வெளிச்சத்தில்தான் சென்றோம். எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையே எவ்வளவு தூரம் இடைவெளி இருந்தது என்றால் சந்தில் ஒருபக்கம் அவர்களும், மறுபக்கத்தில் ...

நாங்கள் சென்றோம். அந்த சந்தின் அகலம் 15 அடி இருக்கும். நாங்கள் இரவில் சென்றதால் வண்டியின் முன்விளக்கு வெளிச்சத்தில் சென்றோம். எங்கள் வண்டி சத்தத்தில் செல்லும்போது, எங்களுக்கு கேட்கும் அளவில் எதிரிகள் சத்தமாக பேசினார்கள். எதிரிகள் யாரை செய்ய வேண்டும் என்று பேசவில்லை. அதற்குள் நாங்கள் வந்துவிட்டோம். அந்த இடத்தை கடந்த பிறகு என் வீட்டிற்கு ஐந்தாறு நிமிடத்தில் சென்றேன். நான் வீட்டிற்கு சென்றபோது என் அண்ணன்கள் பெரியசாமியும், கிருஷ்ணமூர்த்தியும் வீட்டிலிருந்தனர். நான் போகும்போது இரவு மணி 11.00. என் அண்ணன்கள் இருவரும் தூங்கிவிட்டனர். மறுநாள் காலையில் நான் காலை 7.00 மணிக்கு எழுந்தேன். மற்றவர்கள் சீக்கிரமாக எழுந்தனர். மற்றவர்கள் கடைக்கு சென்றுவிட்டனர். நானும் பெரிய அண்ணனும் மட்டும் வீட்டில் இருந்தோம். என் மூத்த அண்ணனிடம் எதிரிகள் பேசிக்கொண்டிருந்த விவரத்தை நான் சொல்லவில்லை. சம்பவ காலத்தில், சம்பவ இடத்தில் இளநீர் கடை போடவில்லை என்றும், சம்பவத்திற்கு முதல்நாள் இருசக்கர வாகனத்தில் நான் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கிற்காக பின்யோசனை செய்து, சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னபடி, சொன்ன இடத்தில் எதிரிகள் நின்றுக்கொண்டு சதித்திட்டம் தீட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. என் அண்ணனை வெட்டியபிறகு, போலீசார் வரும்வரை என் அண்ணன் உடலுடன்தான் நான் இருந்தேன். என் அண்ணன் அவசரசிகிச்சை பிரிவில் இருக்கும்போதே போலீசார் வந்தனர். என் அண்ணன் அவசர சிகிச்சை பிரிவில் இருக்கும்போது என் அண்ணியை போலீசார் விசாரித்தனர். அப்போது நான் உடனிருந்தேன். என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தனர். முதல்நாள் இரவு எதிரிகள் பேசிக்கொண்டிருந்த விவரத்தை போலீசார் என்னை விசாரித்தபோது சொன்னேன். நான் சொன்னபடி, 17ம் தேதி இரவு எதுவும் நடக்கவில்லை என்றும், மறுநாள் 18ம் தேதி நடந்த சம்பவத்தின்போது நான் சம்பவ இடத்திலேயே இல்லை என்றும், சொன்னால் சரியல்ல. என் குடும்பத்தினர் யாருக்கும் என் அண்ணனை கொலை செய்தது யாரென்று தெரியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் முதல்நாள் இரவு எதிரிகள் சதித்திட்டம் தீட்டியது குறித்து வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. வாக்குமூலம் அளித்தேன். நான் சம்பவத்தை நேரில் கண்ணுற்ற சாட்சி இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவத்திற்கும், 1 மற்றும் 4 எதிரிகளுக்கும் எந்த நேரடி ...

தொடர்பும் கிடையாது என்றும் சொன்னால் சரியல்ல. மற்ற எதிரிகளுக்கும், சதித்திட்டத்திற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. எதிரிகள் மீது உண்மைக்கு புறம்பாக வழக்கு தொடுக்கப்பட்டு, நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 18.09.2020 அன்று காலையில் எதிரிகள் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. பொங்கல்விழாவின்போது என் அண்ணனுக்கும், பிரேம்குமாருக்கும் தகராறு ஏற்பட்டது என மற்ற சாட்சிகளின் சாட்சியத்திற்கு முரண்பட்டு நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**2, 6, 8, 9** மற்றும் **12** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் வீட்டிலிருந்து அண்ணா நகர் 1 கி.மீ. தூரத்தில் உள்ளது. LGB ரோடுக்கு கிழக்கு பக்கம் ராமனுஜம் நகர் ரோடும், அதற்கடுத்து கிழக்கே அண்ணாநகர் ரோடும் உள்ளது. மூன்று ரோடுகளும் ஒரே அளவில் 1 கி.மீ. தூரத்திற்கு உள்ளது. அண்ணா நகர் ரோட்டில் மேற்குபக்கம் டீச்சர்ஸ் காலனி உள்ளது. டீச்சர்ஸ் காலனியில் 4 வீதிகள் உள்ளன. இளநீர்கடையிலிருந்து என் வீட்டிற்கு செல்வதற்கு அண்ணா நகர் ரோடு வழியாக வழி கிடையாது என்றால் சரியல்ல. எதிரி அஜீத் என்பவர் ஆப்பிள் டிராவல்ஸ்-ல் டிரைவராக வேலை பார்த்து வந்தார் என்றும், 17 ம் தேதி இரவு நான் சொன்ன நேரத்தில் எதிரி அஜீத் சவாரியில் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. பிரேம்குமார், துரைப்பாண்டி, அஜீத், தமிழரசன் ஆகிய யாரையும் எனக்கு தெரியாது என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து அவர்களை எனக்கு தெரியும் என சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 1 முதல் 4 எதிரிகளுக்கும், மற்ற எதிரிகளுக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிரி தமிழரசன் சௌந்தராபுரத்தில் வசித்து வருகிறார் என்றால் அது அவரது சொந்த ஊர். 17 ம் தேதி இரவு எதிரி தமிழரசன் கரூரில் இல்லை என்றும், கரூரிலிருந்து 40 கி.மீ. தூரத்தில் உள்ள சௌந்தராபுரத்தில் இருந்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை கூடுதலாக ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கோயம்புத்தூர் ரோட்டிலிருந்து LGB நகர் வழியாக என் வீட்டிற்கு செல்வதுதான் வழக்கமான வழி. அண்ணாநகர் கறிக்கடை சந்து LGB நகர் ரோட்டிற்கு கிழக்கே மூன்று ரோடுகள் தள்ளி உள்ளது. அரவிந்த் என்பவரை எனக்கு 3, 4 வருடங்களாக தெரியும். அவருடைய அப்பா பெயர் எனக்கு தெரியாது. அரவிந்த் வீடு எங்கு உள்ளது என்று தெரியாது. அண்ணா நகரில் உள்ள பசங்களுடன் இருப்பார். அரவிந்தனின் அப்பா பெயர், அவர் வீட்டு முகவரியை போலீசார் விசாரித்தபோது நான் கூறவில்லை.

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை கூடுதலாக ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**10** ம் எதிரி தரப்பில் கு.வி.</u>

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>**11** ம் எதிரி தரப்பில் கு.வி.</u>

11 ம் எதிரி கலைச்செல்வனை எனக்கு சுமார் இரண்டு வருடங்களாக தெரியும். அந்த பகுதியில் பசங்களுடன் இருப்பார். அவர் வீடு எங்குள்ளது என்று தெரியாது. அவர் என்ன வேலைக்கு செல்கிறார் என்று எனக்கு தெரியாது. அவருடைய அப்பா யார் என்று எனக்கு தெரியாது. 11 ம் எதிரி கோவை கற்பகா கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார் என்றும், 17 ம் தேதி இரவு அவர் சம்பவ இடத்தில் அவர் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல.

1 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை கூடுதலாக ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர் தெரிவித்தார்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-4** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : அஸ்வினி | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

*(எதிரிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க எதிரிகள் வரிசைப்படி அமராமல், தங்கள் விருப்பப்படி அமர்ந்துள்ளனர்)*

நான் சின்னாண்டாங்கோவிலில் குடியிருந்து வந்து, நர்சிங் படித்து வருகிறேன். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் அக்கா கணவர். அ.சா.1 என் அக்கா. 17.09.2020 அன்று நான் கல்லூரிக்கு சென்றேன். காலையில் செலவிற்கு ரூ.50 பணம் வாங்குவதற்காக இளநீர் கடைக்கு சென்றேன். என் அக்காவிடம் பணம் ...

வாங்குவதற்கு சென்றேன். என் அக்காவிடம் பணம் வாங்கிக்கொண்டு, இளநீர் கடையிலிருந்து கல்லூரி நோக்கி சென்றுக்கொண்டிருந்தேன். நான் செல்லும் வழியில் பிரேம் மஹால் ரோட்டில் காவியாரமேஷ் நின்றுக்கொண்டிருந்தார். VKG பெட்ரோல் பங்க் அருகில் கேசவன் என்பவர் நின்றுக்கொண்டிருந்தார். நான் அவர்களை பார்த்துக்கொண்டே காலேஜுக்கு சென்றேன். பின்னர் கால்மணிநேரம் கழித்து என் அக்கா எனக்கு போன் செய்து, மாமாவை வெட்டி விட்டார்கள், அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்துவிடு என்று என்னை அழைத்தார். நான் அங்கு சென்று பார்த்தபோது, என் மாமா இறந்துவிட்டார் என தெரிவித்தனர். அப்போது அவர்கள் இருவரும் என் மாமாவை வெட்டுவதற்காகத்தான் நின்றுக்கொண்டிருந்தார்கள் என நினைத்து என் அக்காவிடம் சொன்னேன். காவியாரமேஷ், கேசவன் ஆகியோர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். நீதிமன்ற ஆஜரில் இடமிருந்து வலமாக 9 வதாக உள்ள வெள்ளை சட்டை அணிந்திருக்கும் நபர் காவியாரமேஷ். நீதிமன்ற ஆஜரில் இடமிருந்து வலமாக 3 வதாக உள்ள கருப்புநிற சட்டை அணிந்திருக்கும் நபர் கேசவன். (நீதிமன்ற ஆஜரில் *9* வது நபராக இருப்பவர் காவியாரமேஷ் ஆவார். நீதிமன்ற ஆஜரில் *3* வது நபராக இருப்பவர்கேசவன் ஆவார்*)*. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர். அரசு மருத்துவமனையில் வைத்து போலீசார் என்னை விசாரித்தனர். அதன்பிறகு, நீதித்துறை நடுவர் முன்பு நான் வாக்குமூலம் அளித்தேன். நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் "பிரேம் மஹால் ரோட்டில் காவியாரமேஷ் நின்றுக்கொண்டிருந்தார் என்பதையும், என் மாமாவை வெட்டுவதற்காகத்தான் அவர்கள் நின்றுக்கொண்டிருந்தார்கள் என்பதையும்" சொன்னேன். நீதித்துறை நடுவரிடம் நான் அளித்த வாக்குமூலம் என்னிடம் காட்டப்படுவது. அது அ.சா.ஆ.5. அதில் உள்ள கையெழுத்து என்னுடையது.

<u>**6** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் சம்பவ சமயத்தில் கல்லூரியில் முதலாம் வருடம் படித்து வந்தேன். கொரோனா தொற்று காலத்தில் கல்லூரி மற்றும் அரசு அலுவலகங்கள் செயல்படவில்லை என்பது எனக்கு தெரியும். கொரோனா தொற்று காலத்தில் இணையவழி மூலம் வகுப்புகள் நடந்தது. சம்பவத்தன்று கல்லூரி திறந்திருந்தது என சாட்சி தானாக கூறுகிறார். நான் சொன்னபடி அன்றைய தினம் நான் கல்லூரிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. அன்றைய தினம் நான் என் அக்காவிடம் பணம் ...

வாங்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. போலீசார் சொல்லிக்கொடுத்து, கேசவன் என்பவரை நான் நீதிமன்றத்தில் அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. கேசவன் என்பவர் மதுரை மாவட்டம், வாடிப்பட்டியை சேர்ந்தவர் என்றும், அவரை எனக்கு தெரிவதற்கு வாய்ப்பில்லை என்றும் சொன்னால் அவரை எனக்கு முன்பே தெரியும். என் அக்கா காதலித்து திருமணம் செய்துக்கொண்டார். அதனால் சம்பவ சமயத்தில் நானும், என் குடும்பத்தினரும் என் அக்கா மீதுள்ள கோபத்தில் அவருடன் பேச்சுவார்த்தை இல்லாமல் இருந்து வந்தோம் என்றால் சரியல்ல. எதிரிகளை வழக்கில் சேர்ப்பதற்காக போலீசார் என்னை சாட்சியாக சேர்த்துள்ளனர் என்றும், போலீசார் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 6ம் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**5**ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் கல்லூரிக்கு என் வீட்டிலிருந்து தினமும் நடந்து செல்வேன். என் வீட்டிலிருந்து கறிக்கடை சந்து வழியாக நடந்து செல்வேன். எனது வீட்டிலிருந்து கறிக்கடை சந்து வழியாக தெற்கு ராமனுஜம் நகர் சந்து சென்று, அங்கிருந்து அமராவதி மருத்துவமனை செல்ல வேண்டும். அந்த வழியாகத்தான் நான் தினமும் நடந்து செல்வேன். சம்பவத்தன்று எனது செலவிற்கு காசு வாங்குவதற்காக இளநீர் கடை வழியாக சென்றேன். அன்று மட்டும்தான் நான் சென்றேன். எத்தனை மணிக்கு என் அக்கா போன் செய்தார் என்றால் நான் மணி பார்க்கவில்லை. 15 நிமிடத்தில் போன் செய்தார். என் அக்கா போன் செய்தவுடன் அப்பல்லோ மருத்துவமனைக்கு நான் நடந்து சென்றேன். அமராவதி மருத்துவமனையிலிருந்து 15 நிமிடத்தில் அப்பல்லோ மருத்துவமனைக்கு வந்தேன். நான் அப்பல்லோ மருத்துவமனைக்கு வரும்போது 9.30 மணியிருக்கும். இளநீர் கடைக்கு மேற்குபக்கம் எதிர்திசையில் 200 மீட்டர் தூரத்தில் பிரேம் மஹால் உள்ளது. நான் அப்பல்லோ மருத்துவமனை சென்றபிறகு நான் என் அக்காவுடன்தான் இருந்தேன். தொடர்ந்து இரண்டு நாட்கள் என் அக்காவுடன் இருந்தேன். என் அப்பா, அம்மா இருவரும் வேலைக்கு செல்கின்றனர். எனக்கு 5ம் எதிரி காவியாரமேஷ் என்பவரை யாரென்றே தெரியாது என்றால் எனக்கு முன்பே தெரியும். போலீசார் சொல்லிக்கொடுத்து நான் அவரை அடையாளம் காட்டி சாட்சியம் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதியில் எதையும் பார்க்கவில்லை என்றும், நான் எங்கும் செல்லவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் ...

பார்க்காததை பார்த்தேன் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அன்றைய தினம் இளநீர்கடைக்கே செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இளநீர் கடையில் என் அக்காவிடம் பணம் வாங்கிக்கொண்டு, மேற்கு நோக்கி சென்று, ரோட்டை கடந்து, பிரேம் மஹால் வழியாக கல்லூரிக்கு சென்றேன்.

<u>**6** ம் எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்</u>

கரூர் - கோவை ரோட்டில் ரவுண்டானா வரை சாலையின் நடுவே தடுப்பு உள்ளது. இளநீர் கடையிலிருந்து கல்லூரிக்கு செல்வதற்கு கிழக்கு நோக்கி செல்வதுதான் பாதை என்றும், மேற்கு நோக்கி செல்லவேண்டிய அவசியமில்லை என்றும் சொன்னால் சரியல்ல. இளநீர் கடையிலிருந்து மேற்கு நோக்கி ரவுண்டானா சுற்றி பிரேம் மஹால் வழியாக செல்ல வேண்டிய அவசியமில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாலையில் தடுப்பு உள்ளதால் சாலையை கடப்பதற்காக மேற்கு நோக்கி சென்றேன். கல்லூரிக்கு இளநீர் கடையிலிருந்து கிழக்கு பக்கமாக செல்வதுதான் பக்கம். ஆனால் பஸ்டாப் இருப்பதால் ரோட்டை கடந்து, மறுபக்கம் வழியாக சென்றேன். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**5** ம் எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை நீதிமன்ற அனுமதியுடன்</u>

இளநீர் கடையிலிருந்து ரோட்டின் ஓரமாக தாராளமாக கிழக்கு நோக்கி செல்ல முடியும். நான் முதல்விசாரணை சாட்சியத்திற்கு முரண்பட்டு தற்போது சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்திற்கு அருகில் பஸ்டாப் இல்லை என்றால் சரியல்ல. இளநீர் கடைக்கு கொஞ்சதூரம் தள்ளி ரோட்டை கடந்தால் பஸ்டாப் உள்ளது. அந்த பஸ்டாப் இளநீர் கடைக்கு எதிரில் உள்ளது. அந்த பஸ்டாப் கரூருக்கு செல்லும் பஸ்டாப். இளநீர் கடையிலிருந்து ரவுண்டானா வரை ரோட்டின் நடுவே தொடர்ச்சியாக தடுப்பு உள்ளது என்றும், அதில் இடைவெளி உள்ளது என்றும் சொன்னால் நடுவே குறுக்கே நடந்து செல்லலாம். ஒரு ஆள் செல்லும் அளவிற்கு இடைவெளி உள்ளது. நான் சொன்னபடி சென்றால் இரண்டுமுறை கரூர் - கோவை ...

நால்வழிச்சாலையை கடந்து அமராவதி மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் என்றால் சரியல்ல. கரூர் - கோவை ரோட்டை கடந்துதான் எதிர்திசைக்கு செல்ல வேண்டும். எதிர்திசையிலிருந்து மீண்டும் கரூர் - கோவை ரோட்டை கடந்து அமராவதி மருத்துவமனை செல்ல வேண்டும். மேற்சொன்ன விவரத்தை போலீசாரிடம் நான் அளித்த வாக்குமூலத்தில் சொன்னேன். சாட்சியிடம் குவிமுச *161* வாக்குமூலத்தை காண்பித்து சாலையை கடந்து சென்ற விவரத்தை கூறப்பட்டுள்ளதா என்று கேட்டதற்கு நடந்துபோனேன் என கூறியுள்ளேன் என சாட்சி சொல்கிறார்.

**9** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

இறந்துபோனவர் என் அக்காவின் கணவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**

**<u>IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.</u>**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-5** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : குணசேகரன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**.** **1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**,** **2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**,** **4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**)** **R.S.**மணி**,** **5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**,** **6**ம் எதிரி கேசவன்**,** **7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**,** **8**ம் எதிரி தமிழரசன்**,** **9**ம் எதிரி அஜீத்**,** **10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**,** **11**ம் எதிரி கலைச்செல்வன்**,** **12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**.** **3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் சின்னாண்டாங்கோவிலில் குடியிருந்து வந்து, டேன்சி எதிர்புறம் இளநீர் கடை வைத்துள்ளேன். எனக்கு மூன்று மகன்கள். ஒரு மகள். இவ்வழக்கு சம்பவத்தில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் இரண்டாவது மகன். 17ம் தேதி கோகுல், துரைப்பாண்டி, பிரேம்குமார், மணிகண்டன் ஆகியோருக்கும், என் மகன் கிருஷ்ணமூர்த்திக்கும் சண்டை வந்தது என்று என் மூத்த மகன் என்னிடம் சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**1** முதல் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | | |
| | : | Prosecution | - | **PW-6** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : ரஞ்சிதம் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் சின்னாண்டாங்கோவிலில் வசித்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன கிருஷ்ணமூர்த்தி என் மகன். அ.சா.5 என் கணவர். அ.சா.2, 3 என் மகன்கள். சம்பவத்திற்கு முதல்நாள் 17 ம் தேதி பிரச்சினை என்று என் மூத்த மகன் சொன்னார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**7** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவத்திற்கு முதல்நாள் இரவு என் மகன் பிரவீன் என் வீட்டிற்கு வந்ததை பார்க்கவில்லை. அசதியில் படுத்துவிட்டோம். மறுநாள் காலை 7.00 மணிக்கு இளநீர் வரும் என சொல்லி, கடைக்கு வரச்சொல்லிவிட்டு சென்றேன். அப்போது என் இளையமகன் பிரவீனை பார்த்தேன். என் மகன் பிரவீன் அப்போது என்னிடம் எதுவூம் சொல்லவில்லை.

மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

மறு விசாரணை

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-7** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கோவிந்தராஜ் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் சோளியம்மன்கோவில் அருகில் வசித்து வந்து, திருக்காம்புலியூர் சுடுகாட்டிற்கு அருகில் பைபாஸிற்கு கீழே இளநீர் கடை வைத்துள்ளேன். நான் காலையில் கடையை எடுத்து வைத்தேன். எனக்கு இரத்தக்கொதிப்பு உள்ளதால் தலைச்சுற்றல் வந்தது. வீட்டிற்கு சாப்பிடுவதற்கு சென்றுவிட்டேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என் கடைக்கு என் மனைவி வந்திருந்தார். அவரையும் அழைத்துக்கொண்டு சென்றுவிட்டேன். நான் வழக்கு சம்பவத்தைபார்க்கவில்லை. ...

என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

நான் இந்து, தேவேந்திர குல வேளாளர் சாதியைச் சேர்ந்தவன். எனக்கு ஒரு மகன், ஒரு மகள் உள்ளனர். என் மகன் பெயர் நந்தக்குமார். என் மகன் நந்தக்குமார் மீது ஒரு கொலைவழக்கு நடந்து வருகிறது.

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 18.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு நானும், என் மனைவியும் கடையில் இருந்தோம் என்றும், எங்கள் கடைக்கு மேல்புறத்தில் பெரியசாமியும், கிருஷ்ணமூர்த்தி, அவர் மனைவி சஷ்மிதா ஆகியோர் அவர்கள் கடையில் இருந்தனர் என்றம், பின்னால் பெயர் கேட்டு தெரிந்துக்கொண்ட கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி ஆகியோர் வந்து, கிருஷ்ணமூர்த்தியின் வலது காதின் பின்புறம் கோகுல் வெட்டினார் என்றும், பாண்டி (எ) துரைப்பாண்டி அவர் வைத்திருந்த அருவாளால் கிருஷ்ணமூர்த்தியின் உச்சந்தலையில் வெட்டினார் என்றும், பின்னர் இருவரும் மாறி மாறி கிருஷ்ணமூர்த்தியை வெட்டினார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி இரத்தக்காயத்துடன் கீழே விழுந்துவிட்டார் என்றும், பின்னர் பிரேம்குமாரும், மணிகண்டனும் இன்னும் உயிர் இருக்குடா, நல்லா வெட்டி சாவடிங்கடா என்று சொன்னபோது, நானும், துரைசாமியும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும், என் மனைவியும், பிரவீனும், தடுக்க சென்றபோது, எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள்களை காட்டி கிட்டே வந்தால் உங்களை வெட்டிவிடுவோம் என்று மிரட்டிவிட்டு, இருசக்கர வாகனத்தை மணிகண்டன் ஓட்ட அவருக்கு பின்னால் கோகுலும், துரைப்பாண்டியும் சென்றுவிட்டனர் என்றும், அவர்களுக்கு பின்னால் பிரேம்குமார் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், காயம்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அப்பல்லோ மருத்துவமனை கொண்டு சென்றார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி 10.50 மணிக்கு இறந்துவிட்டார்ள ன்று தகவல் தெரிந்துக்கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கோகுல் என் சாதியை சேர்ந்தவர் என்ற காரணத்தினாலும், என் மகன் நந்தக்குமார் தேவேந்திரகுல மக்கள் இயக்கத்தை சேர்ந்தவர் என்றும், என் மகன் கேட்டுக்கொண்டதற்காக எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தன்று நான் இளநீர் கடை வைத்துவிட்டு வீட்டிற்கு சென்றேன் என்று சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-8** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : மணியம்மாள் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

முதல் விசாரணை

நான் சமத்துவபுரத்தில் வசித்து வந்து, பைபாஸ் ரோட்டில் இளநீர் கடை வைத்துள்ளேன். அ.சா.7 என் கணவர். என் கடைக்கு மேற்குபக்கம் குணசேகரன் என்பவரது இளநீர் கடை உள்ளது. இவ்வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் சம்பவத்தை பார்க்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தபோது, கடந்த 18.09.2020 அன்று காலை 9.00 மணிக்கு நானும், என் கணவரும் கடையில் இருந்தோம் என்றும், எங்கள் கடைக்கு மேல்புறத்தில் பெரியசாமியும், கிருஷ்ணமூர்த்தி, அவர் மனைவி சஷ்மிதா ஆகியோர் அவர்கள் கடையில் இருந்தனர் என்றும், பின்னால் பெயர் கேட்டு தெரிந்துக்கொண்ட கோகுலகிருஷ்ணன், பாண்டி (எ) துரைப்பாண்டி ஆகியோர் வந்து, கிருஷ்ணமூர்த்தியின் வலது காதின் பின்புறம் கோகுல் வெட்டினார் என்றும், பாண்டி (எ) துரைப்பாண்டி அவர் வைத்திருந்த அருவாளால் கிருஷ்ணமூர்த்தியின் உச்சந்தலையில் வெட்டினார் என்றும், பின்னர் இருவரும் மாறி மாறி கிருஷ்ணமூர்த்தியை வெட்டினார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி இரத்தக்காயத்துடன் கீழே விழுந்துவிட்டார் என்றும், பின்னர் பிரேம்குமாரும், மணிகண்டனும் இன்னும் உயிர் இருக்குடா, நல்லா வெட்டி சாவடிங்கடா என்று சொன்னபோது, நானும், துரைசாமியும், கிருஷ்ணமூர்த்தியின் மனைவியும், என் கணவரும், பிரவீனும், தடுக்க சென்றபோது, எதிரிகள் கையில் வைத்திருந்த அருவாள்களை காட்டி கிட்டே வந்தால் உங்களை வெட்டிவிடுவோம் என்று மிரட்டிவிட்டு, இருசக்கர வாகனத்தை மணிகண்டன் ஓட்ட அவருக்கு பின்னால் கோகுலும், துரைப்பாண்டியும் சென்றுவிட்டனர் என்றும், அவர்களுக்கு பின்னால் பிரேம்குமார் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றார் என்றும், காயம்பட்டிருந்த கிருஷ்ணமூர்த்தி தனியார் ஆம்புலன்ஸ் மூலம் அப்பல்லோ மருத்துவமனை கொண்டு சென்றார்கள் என்றும், கிருஷ்ணமூர்த்தி 10.50 மணிக்கு இறந்துவிட்டார் என்று தகவல் தெரிந்துக்கொண்டேன் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரி கோகுல் என் சாதியை சேர்ந்தவர் என்ற காரணத்தினாலும், என் மகன் நந்தக்குமார் தேவேந்திரகுல மக்கள் இயக்கத்தை சேர்ந்தவர் என்றும், என் மகன் கேட்டுக்கொண்டதற்காக எதிரிகளை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

<u>**1** முதல் **12** எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இல்லை என கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.

<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**</u>

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 17/2021 | |
| | : | Prosecution - | **PW-9** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : தீபக் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 03rd day of July 2023.

**(**குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர்**. 1**ம் எதிரி கோகுலகிருஷ்ணன் **(**எ**)** கோகுல்**, 2**ம் எதிரி துரைப்பாண்டி **(**எ**)** பாண்டி**, 4**ம் எதிரி மணிகண்டன் **(**எ**) R.S.**மணி**, 5**ம் எதிரி ரமேஷ் **(**எ**)** காவியாரமேஷ்**, 6**ம் எதிரி கேசவன்**, 7**ம்ம எதிரி அரவிந்த்குமார் **(**எ**)** அரவிந்த்**, 8**ம் எதிரி தமிழரசன்**, 9**ம் எதிரி அஜீத்**, 10**ம் எதிரி செந்தில் **(**எ**)** செந்தில்ஈஸ்வரன்**, 11**ம் எதிரி கலைச்செல்வன்**, 12**ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்**. 3**ம் எதிரி இவ்வழக்கிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டு**,** அவருக்கு எதிரான சிறப்பு வழக்கு **SPL.SC. 11/2023** நிலுவையில் இருந்து வருகிறது**)**

<u>முதல் விசாரணை</u>

நான் திருக்காம்புலியூரில் வசித்து வந்து, நிதிநிறுவனத்தில் கலெக்சன் மேலாளராக வேலை பார்க்கிறேன். சாட்சி காமராஜை எனக்கு தெரியும். 18.09.2020 அன்று மதியம் சாப்பிடுவதற்காக என் வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தபோது, வழக்கு சம்பவ இடத்தில் கும்பலாக நின்றுக்கொண்டிருந்தார்கள். போலீசார் வரைபடம் வரைந்து, மகஜர் தயாரித்தனர். போலீசார் என்னிடமும், காமராஜிடமும் மகஜரில் கையெழுத்து வாங்கினார்கள். இரத்தக்கறை படிந்த ஓடு, இரத்தக்கறை படியாத ஓடு ஆகியவற்றை ...

மகஜரில் கைப்பற்றினார்கள். அதற்கும் நாங்கள் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படுவது. அந்த பார்வை மகஜர். அது அ.சா.ஆ.6. கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.7. அதில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது. இரண்டாவது கையெழுத்து காமராஜருடையது. போலீசார் கைப்பற்றிய இரத்தக்கறை படிந்த டைல்ஸ் துண்டுகள் சா.பொ.4. இரத்தக்கறை படியாத டைல்ஸ் துண்டுகள் சா.பொ.5.

<u>**1** மற்றும் **4** ம் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் நிதிநிறுவனத்தில் சட்ட அதிகாரியாக பணிபுரிகிறேன். அ.சா.ஆ.6 மற்றும் 7 காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும், நிதிநிறுவனத்தில் நான் சட்ட அதிகாரியாக பணிபுரிவதால் காவல்துறையினர் உதவி வேண்டும் என்பதால், அ.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணங்களில் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல.

<u>**5** ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

திருக்காம்புலியூரிலிருந்து நான் கரூருக்கு வருவதற்கு கரூர் – கோவை சாலை வழியாக வரவேண்டும். அந்த சாலை பற்றி எனக்கு தெரியும். இளநீர் கடை நடைபாதையில் உள்ளது. அந்த நடைபாதை டெல்லி ஸ்வீட்ஸ் வரை செல்கிறது. அதற்கு இடையில் அமராவதி மருத்துவமனை அமைந்துள்ளது.

<u>மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக கற்றறிந்த வழக்கறிஞர்கள் தெரிவித்தார்கள்.

<u>மறு விசாரணை</u>

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.